DEPOSITION OF WITNESS

**In the Court of the Principal District Judge, Tiruchirappalli.**

**Sessions Case No. 180 / 2024**

Prosecution Witness No. PW. 05

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | **தனீஷ்குமார்** | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம்ணு | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 11.08.2025.

(Accused Present)

**முதல் விசாரணை** :

நான் பெருமாள்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என் அப்பா. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 11.03.2024–ஆம் தேதி நான் வேலைக்கு சென்றுவிட்டு மாலை 5.30 அல்லது 6 மணியளவில் வீட்டிற்கு வந்தேன். எனது தங்கை சுபநந்தினி ஓடிவந்து என்னிடம் அப்பாவை வெட்டி கொலை செய்துவிட்டார்கள் என்று சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன். என் அப்பா வெட்டுப்பட்டு கிடந்தார். உடல் முழுவதும் அந்த இடத்தில் ரத்தமாக இருந்தது. அங்கு ஆம்புலன்ஸ் வந்து சோதித்துவிட்டு என் தகப்பனார் இறந்துவிட்டதாக சொன்னார்கள். அதன்பிறகு, என் தாயார் சென்று புகார் கொடுத்தார். மறுநாள் போலீசார் பிரேத பரிசோதனை செய்து என்னை விசாரித்தார்கள். ../

என் தங்கை என்னிடம் என் சித்தப்பா சந்திரசேகரன் வெட்டி கொலை செய்ததாக சொன்னார். அப்போது என் அம்மாவும் உடன் இருந்ததாக சொன்னார். எதிரி பெயிலில் வந்த பிறகு எங்களை மிரட்டிகொண்டிருக்கிறார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :</u>

நான் பி.காம். படித்துள்ளேன். போலீஸ் விசாரணையின்போதும் நான் முதல்விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் சொன்னேன். நான் 5.30, 6 மணியளவில் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் 5.30, 6 மணிக்கு கம்பெனியில் இருந்து கிளம்பிவிட்டேன் என்றும், வீட்டிற்கு வந்தபிறகு என் தங்கை என்னிடம் லேட்டாக தகவல் சொன்னதாக சொல்லியுள்ளேன். எங்கள் ஊருக்கும் துறையூருக்கும் ஏழு, எட்டு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் துறையூரிலிருந்து வேலை முடிந்து கிளம்பும்போது என்ன நேரம் இருக்கும் என்றால் ஞாபகமில்லை. நான் வீட்டிற்கு வந்தபொழுது ஏழு மணிக்கு மேல் இருக்கும். என் தங்கை வீட்டிற்கு ஓடி வந்து தகவல் சொன்னார் என்று சொல்வது சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது ஊர்க்காரர்கள் நிறைய பேர் கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். நான் போய் பார்த்தபோது எதிரி சந்திரசேகரன் அங்குதான் இருந்தார் என்றால் அவர் அங்கு இல்லை. அவர் அங்கிருந்து எப்பொழுது சென்றார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆம்புலன்ஸ் எவ்வளவு நேரத்தில் வந்தது என்று எனக்கு தெரியாது. நான் அங்கு போனபிறகு ஐந்து நிமிடத்தில் வந்தது. போலீசார் ஆம்புலன்ஸ் வந்தவுடன் வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல, ஒன்பது மணிக்கு மேல்தான் வந்தார்கள். என்மீது எதிரியை தாக்கியதாக ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்பட்டது. ../

அந்த வழக்கில் நான் போலீசார் சொன்னபடி முன்ஜாமீன் வாங்கினேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்தில் எதிரிக்கு காயம்பட்டது என்ற விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் தெரியாது. பிரேதத்தை அன்றயை தினம் எடுத்துச் சென்றபோது நேரம் என்ன இருக்கும் என்றால் இரவு 10 மணி இருக்கும். நான் முதல்விசாரணையில் சொன்னது பொய் என்றாலும், நான் சொன்னவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

# DEPOSITION OF WITNESS

## In the Court of the Principal District Judge, Tiruchirappalli.

## Sessions Case No. 180 / 2024

Prosecution Witness No. PW. 06

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | பாலகுமார் | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம்ணு | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 11.08.2025.

(Accused Present)

**முதல் விசாரணை** :

நான் பெருமாள்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். டிரைவராக வேலை செய்கிறேன். எங்கள் ஊரைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி என்பவர் வெட்டுப்பட்டு இறந்துபோனார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் கிருஷ்ணமூர்த்தியின் தம்பி. 12.03.2024–ஆம் தேதி சம்பவத்திற்கு மறுநாள் ஊருக்கு வந்தேன். கிருஷ்ணமூர்த்தி இறந்ததை கேள்விப்பட்டு அரசு மருத்துவமனைக்கு பிரேதத்தை பார்ப்பதற்காக சென்றேன். பாடியை பெற்றுக்கொள்வதற்காக கையெழுத்து போடச் சொன்னார்கள், கையெழுத்து போட்டு பிரேதத்தை எடுத்துக்கொண்டு வந்துவிட்டோம். நோட்டு புத்தகத்தில் கையெழுத்து போட்டேன். நான் எதிரியை கைது செய்தபோது உடன் இல்லை. எனக்கு அவர் கைது செய்ததை பற்றி தெரியாது. எதிரிதான் கொலை செய்ததாக சொன்னார்கள். பிரேதத்தை பெறும்பொழுது கையெழுத்து போட்டதை தவிர வேறெங்கும் நான் கையெழுத்து போடவில்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் ../

வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான், அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக தீர்மானித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**<u>அரசு தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை :-</u>**

போலீஸ் விசாரணையில் கடந்த 12.03.2024–ஆம் தேதி பகல் 1.15 மணிக்கு பிரேத்தை வாங்கிய பிறகு, இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி சந்திரசேகரனை கைது செய்திருப்பதாகவும், அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் தர இருப்பதாகவும், அதற்கு சாட்சியாக என்னையும் என் மாமா சண்முகத்தையும் ஆய்வாளர் கேட்டுகொண்டதிற்கிணங்க துறையூர் GH பஸ் ஸ்டாப்பிற்கு சென்றோம் என்றும், அங்கு கைது செய்து வைத்திருந்த சந்திரசேகரன் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில், தன்னை அழைத்துச் சென்றால் சம்பவத்தின்போது பயன்படுத்திய கொடுவாளையும், ரத்தக்கறை படித்திருந்த சட்டையையும் தான் மறைத்து வைத்திருந்த இடத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார் என்றும், அதன்படி ஆய்வாளர் எதிரியை அழைத்துக்கொண்டு பெருமாள்பாளையம் ஆசாரித் தெரு, மரியதாஸ் காலிமனையில் உள்ள பாழடைந்த சுவற்றின் பின்புறமிருந்து எடுத்து ஆஜர் செய்த கொடுவாளையும், இரத்தக்கறை படிந்த சட்டையையும் ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார் என்றும், அந்த மகஜரில் நானும் சண்முகமும் கையெழுத்து போட்டுவிட்டு தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறோம் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

என்னிடம் காட்டப்படும் சான்றுபொருட்களை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல.

**<u>மறுவிசாரணை</u>** :

நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையை பெற்றுக்கொண்டதற்கான கையெழுத்து என்னுடையதுதான். அதுதான் நான் பொதுவாக போடும் கையெழுத்து

ஆகும். நான் வேண்டும் என்றே கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்தை மாற்றி போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS

**In the Court of the Principal District Judge, Tiruchirappalli.**

**Sessions Case No. 180 / 2024**

Prosecution Witness No. PW.07

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | முகமது ஃபாரூக் | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம்ணு | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 11.08.2025.

(Accused Present)

முதல் விசாரணை :

நான் பெருமாள்பாளையத்தில் வசித்து வருகிறேன். கிருஷ்ணமூர்த்தி இறந்த விவரம் எனக்கு தெரியும். கிருஷ்ணமூர்த்தியை அவரது தம்பி சந்திரசேகரன் வெட்டி கொன்றுவிட்டதாக சொன்னாார்கள். 11.03.2024–ஆம் தேதி சம்பவம் முடிந்த பிறகு அங்கு வந்தேன். அங்கு போலீசார் வந்தார்கள். சம்பவ இடத்தை பார்த்து வரைபடம் போட்டார்கள். என்னை விசாரித்தார்கள். சம்பவ இடத்திலிருந்து ரத்தம் படிந்த மண், ரத்தம் படியாத மண் ஆகியவற்றை எடுத்தார்கள். அங்கு கிடந்த ஒரு செல்போனையும் எடுத்தார்கள். பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான், பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான், கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.4. ரத்தம் படிந்த மண் சா.பொ.ஆ.2, ரத்தம் படியாத மண் சா.பொ.ஆ.3, செல்போன் சா.பொ.ஆ.4. போலீசார் என்னை விசாரித்தார்கள். .../

<u>**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :**</u>

நான் டிப்ளமோ மெக்கானிக்கல் படித்துள்ளேன். அங்கு பொதுமக்கள் கூட்டமாக இருந்தார்கள் என்றால் சரிதான். நான் போகும்பொழுது போலீசார் அங்கு இருந்தார்கள். போலீசார் சம்பவ இடத்திற்கு எப்போது வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதல்விசாரணையில் சொன்ன விவரங்கள்தான் நான் கையெழுத்து போட்டுள்ள ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் ஒரு மணி நேரத்திற்கு மேல் இருந்தேன். நான் அங்கு போவதற்கு முன்பே பிரேதத்தை போலீசார் எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. பிரேதத்தை எப்பொழுது எடுத்துச் சென்றார்கள் என்றால் பத்து அல்லது பதினோரு மணிக்கு மேல் இருக்கும். விசாரணைக்காக காவல்நிலையம் வரச்சொல்லவில்லை. நான் மேற்சொன்ன ஆவணங்களில் காவல்நிலையத்தில் கையெழுத்து செய்துவிட்டு, கிருஷ்ணமூர்த்தி குடும்பத்திற்கு நெருக்கமானவர் என்பதால், அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

# DEPOSITION OF WITNESS

## In the Court of the Principal District Judge, Tiruchirappalli.

## Sessions Case No. 180 / 2024

Prosecution Witness No. PW.08

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | தமிழரசன் | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம்ணு | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 11.08.2025.

(Accused Present)

**முதல் விசாரணை** :

நான் துறையூர் காவல்நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 11.03.2024–ஆம் தேதி இரவு பிரேதத்தை சம்பவ இடத்தில் இருந்து பெற்றுக்கொண்டு துறையூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் ஒப்படைத்து பின்னர் மறுநாள் காலை 8.45 மணிக்கு ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை துறையூர் அரசு மருத்துவமனையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனையின்போது உடன் இருந்து பிரேத பரிசோதனை முடிந்த பின்பு பிரேதத்தின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட வெள்ளை, ஊதா, காபி கலர் நிறமுள்ள கட்டம் போட்ட ரத்தம் படிந்த முழுக்கை சட்டை ஒன்று, காக்கி நீலம் கட்டம் போட்ட கைலி ஒன்று, வைகிங் ஜட்டி ஒன்று ஆகியவற்றை பெற்று தனி அறிக்கையுடன் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். அந்த தனி அறிக்கை அ.த.சா.ஆ.5. வெள்ளை, ஊதா, காபி கலர் நிறமுள்ள கட்டம் போட்ட ரத்தம் படிந்த முழுக்கை சட்டை ஒன்று சா.பொ.ஆ.5, காக்கி நீலம் கட்டம் போட்ட கைலி ஒன்று ../

சா.பொ.ஆ.6. வைகிங் ஜட்டி ஒன்று சா.பொ.ஆ.7.ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :**</u>

நான் முதல்விசாரணையில் சொன்னதைதான் ஆய்வாளர் விசாரணையின்போதும் சொன்னேன். 12.03.2024–ஆம் தேதி காலை 11.30 மணிக்கு பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட பொருட்களை ஒப்படைத்து தனி அறிக்கை கொடுத்தேன். அப்போது ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். அதன்பிறகு, ஆய்வாளர் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். தனி அறிக்கையில் நேரம் 18 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.